**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224828

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 06.02.2022

Accepted: 25.03.2022

Published: 01.04.2022

Citation:
Ilakia, S. "Tamil Samoogathin Pulamaiyakka Marabil Pen Eyangiyalum Iruppum." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 4, 2022, pp. 90–98.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4828

*Corresponding Author:
elakiyam90@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tamil Samoogathin Pulamaiyakka Marabil Pen Eyangiyalum Iruppum

**Mrs. S. Ilakia**
*Assistant Professor, Tamil Department*
*Madurai College, Madurai, Tamil Nadu, India*

**Abstract -** Tamil language has two thousand years of classic literary and grammatical resources. The Puluvarmarapu was formed without the long-standing Arupada oral tradition of the Tamil community. Man-made literature is derived from his community. However it stands very much alive in the oral tradition. In the tradition of writing itself it evolves into power. This can be known in Puluvarmarapil. Literature, grammar and texts have appeared in the tradition of linguistic scholarship in the Tamil world of Vadavenkadam Tenkumari Aidai. Yet what is the linguistic scholarship space in which women are creative? This article explores the differences between women's linguistic and scholarly works and their contribution to the field of linguistic scholarship, such as grammar and texts.

**Key Words:** Female Creators, Linguistic Scholarship, Literary Creation, Society Literatures, Female Direction

## References

1. Ilangumaranar, R., Puluvar Marabu,.P. 15.
2. Araventhan, R., Padaipalumai, P.4.
3. Palaniappan, M., Viduthalaikku Munthiya Pen Puthina Padaipaligam.
4. Sampath, R., Penniya Thiranaivu Nokil Penpar Kavingargalin Puthikavithaigal.
5. Kandasamy, S.N., Yappilaganam Thoramum Valarchiyum, P.27.
6. Kandasamy, S.N., Yappilaganam Thoramum Valarchiyum, P.20.
7. Paramasivam, T., Panpattu Asaivugal, P. 98.
8. Aravindan, M.Y., Uriasiriyargal, P.506.

# தமிழ்ச் சமூகத்தின் புலமையாக்க மரபில் பெண்இயங்கிலும் இருப்பும்

***சோ. இலக்கியா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரைக் கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***

*ஈராயிரம் ஆண்டு செவ்வியல் தன்மையுடைய இலக்கிய வளங்களையும் இலக்கண வளங்களையும் கொண்டது தமிழ்மொழி. தமிழ்ச் சமூகத்தின் நீண்ட நெடிய அறுபடா வாய்மொழி மரபினின்றி புலவர்மரபு உருவாக்கம் பெற்றது. மனிதனால் உருவாக்கப்படும் இலக்கியம் அவனுடைய சமூகத்தினடியாகவே பெறப்படுகிறது. எனினும் அது வாய்மொழி மரபில் மிகவும் உயிர்ப்புடன் நிற்கிறது. எழுத்து மரபில் அதுவே அதிகாரமாகப் பரிணமித்து விடுகிறது. இதனைப் புலவர்மரபில் அறியமுடிகின்றது. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில் மொழி சார்ந்த புலமையாக்க மரபில் இலக்கியங்களும் இலக்கணங்களும் உரைகளும் பற்பலத் தோன்றியுள்ளன. ஆயினும் பெண்கள் படைப்பாளிகளாகத் திகழ்ந்த மொழி சார்ந்த புலமையாக்க வெளி எத்தன்மையது. பெண்களின் மொழிவயப்பட்ட புலமையாக்கப் படைப்புகள் மற்ற ஆண் படைப்பாளிகளிடமிருந்து வேறுபடும் தன்மை எத்தன்மையது என்பதனையும் மொழிசார் புலமையாக்கப் படைப்புகளான இலக்கணம், உரைகள் முதலான துறைகளில் பெண்களின் பங்களிப்பு பற்றியும் ஆராயும் தன்மையில் இவ்வாய்வுக் கட்டுரைஅமைந்துள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *பெண் படைப்பாளிகள், மொழிசார் புலமை, இலக்கியப் படைப்பு, சங்க இலக்கியங்கள், பெண் இயக்குவெளி*

**மொழிசார் படைப்பாக்கங்களில் பெண்இருப்பு**

தொல்பழங்கால ஆணாதிக்கச் சூழலில் தொடக்ககால இந்திய மொழி சார்ந்த படைப்பாக்கத்தில் இலக்கியங்களில் பெண்கள் தொடர்ந்து பங்களிப்பு செய்துள்ளனர். தொன்மையான பெண் இலக்கியப் படைப்பாளர்கள் தமிழ் மொழியில் 41 பெண்புலவர்களும், சமஸ்கிருதத்தில் 28 பெண்புலவர்களும், பாலி மொழியில் 73 பெண்புலவர்களும் பிராகிருதத்தில் 11 பெண்புலவர்களும் இலக்கியப் படைப்பாக்கத்தினை மேற்கொண்டுள்ளனர்[2] என்று அறவேந்தன் குறிப்பிடுகின்றார். தமிழ்மொழி மிகப் பழமையான இலக்கிய இலக்கண வளமைகளைக் கொண்டுள்ளது. தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றின் தொடக்க காலமே கடுமையான ஆணாதிக்கச் சூழலுக்குரியதாகும். தமிழ்ச் சமூகத்தின் காலத்தொன்மை மிக்க பாட்டு, தொகை எனப்படும் சங்க இக்கியங்கள் ஆகிய பதினெட்டு நூல்களும் தனித்தனிப் பாடல்களாகப் பாடப்பட்டுப் பின்னர் வெவ்வேறு முறையியலில் தொகுக்கப்பட்டன. தமிழின் செவ்வியல் இலக்கிய ஆக்கங்களாகக் கருதப்படும் இப்பாடல்கள் நாட்டார் நிகழ்கலை மரபிலிருந்தும், வாய்மொழி மரபிலிருந்தும் பாணர் மரபிலிருந்தும் கல்வி கேள்விகளில் சிறந்த புலவர் மரபிலிருந்தும் இன்னபிற மரபிலிருந்தும் உருவாகி வளர்ந்தவை. இப்பாடல்கள் அனைத்தும் கி.மு.250இல் இருந்து கி.பி.250 வரையிலான கால கட்டத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பாடப்பட்டவையாகும். இதன் நீட்சியாகப் பதினெண்கீழ்கணக்கு நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள்,

தனிப்பாடல்கள், சிறுகதை, நாவல், புதுக்கவிதை, நாடகம், என்று அதன் பட்டியல் நீண்டது. இலக்கணப் படைப்புகளுள் தொல்காப்பியம், முதல் அண்மைக்கால இலக்கண நூல்கள் வரையிலான 149 நூல்களைத் தமிழ் மொழிக்குரியவையாகக் குறிப்பிடுவர்.[1] இளங்குமரனார். இந்நூல்களில் காக்கைபாடினியம், சிறுகாக்கைப்பாடினியம் ஆகிய இரு நூல்களே பெண்களால் படைக்கப் பெற்றவை என்று கருதத்க்கன. மேலும் மறைந்து போன தமிழ் இலக்கண நூல்களாக மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடப்பட்டுள்ள 45 நூல்களிலும் பெண்களால் படைக்கப் பெற்ற வேறு நூல்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கியப் படைப்பாக்கங்களில் பெண் இயங்குவெளி

சங்க கால தமிழகம் முழுவதும் சிற்சில பகுதிகளை அரசாண்ட இனக்குழு தலைவர்கள், குறுநில மன்னர்கள் பெருநிலப்பரப்பை ஆட்சி செய்த பேரரசர்கள் வரையிலான ஆள்வோரின் ஆட்சிமுறை, போர்முறை, கொடை, வெற்றி, தோல்வி ஆகியனவும் அது சார்ந்த அறவியல் பார்வைகளையும் சங்க இலக்கியப் படைப்பாக்கங்கள் பதிவு செய்துள்ளன. இவ்விலக்கியங்களில் அரசர் பெயர்கள் இலக்கியங்களில் பதிவான அளவிற்கு அவர்தம் மனைவியர் பெயர்கள் பதிவாகவில்லை. விதிவிலக்காகக் கண்ணகியின் பெயர் வழக்குப் பெற்றுள்ளது. சங்க காலப் புலவர்கள் 473 புலவர்கள் ஆவர். அவர்களுள் 41 பேர் பெண்புலவர்கள் ஆவர். அவர்தம் இலக்கியப் படைப்பாக 177 பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் அகப்பாடல்கள் 104. புறப்பாடல்கள் 73. ஆகும்.

சங்க இலக்கியங்கள் யாப்புநெறிக்கும் அகப்புற திணை மரபுக்கும் உட்பட்டவை. அத்தன்மையில் சங்கப் பாடல்கள் புனைந்த 41 பெண்புலவர்களும் யாப்பியல் பொருளியல் இலக்கணங்களையும் இலக்கியக் கல்வியில் புலமை பெற்றிருந்தனர் என்பதனை அறியமுடிகிறது. இலக்கிய, இலக்கணக் கல்வி கற்றிருந்தனர், எனும் ஒற்றைச் செய்தியினூடாக கடந்து விடாமல் இதை ஆராய முற்படும் பொழுது, பெண் புலவர்கள் இலக்கியப் படைப்புகளில் தம் சமகாலத்தில் வாழ்ந்த மற்ற பெண் புலவர்களின் பெயர்களை பதிவு செய்யும் மரபு அகநானூற்றில் பதிவாகியுள்ளதை அறிய முடிகிறது. சங்க காலப் பெண் படைப்பாளர்கள் மொழிக்கல்வியில் சமகால செல்நெறியைப் பின்பற்றுவதனை அடிப்படையாகக் கொண்டிருந்தனர். தமது இலக்கியப் பயிற்சியின் வழி பிற புலவர்களின் இலக்கியச் செல்நெறியை ஆராய்ந்து அவற்றை தமது படைப்புகளில் வெளிப்படுத்தும் மனப் போக்கு ஆழ்ந்த மொழி சார்ந்த படைப்பக்கப் பயிற்சியினை அன்றைய காலட்டத்திலே அக்காலப் புலவர்கள் கொண்டிருந்தை வெளிப்படுத்துகிறது. இதனை,

> **ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த**
> **வேங்கை வெறித் தழை வேறு வகுத்தன்ன**
> **----------------------------**
> **நெறிபடு கவலை நிரம்பா நீளிடை**
> **வெள்ளிவீதியைப் போல நன்றும்**
> **------------------------------**

***(அகம் - 147)***

என்ற தொடரில் பயின்றுவரும் “வெள்ளிவீதியைப் போல’ என்னும் தொடரை ஔவையார் கையாண்டுள்ள தன்மை இலக்கியக் கல்வி அக்காலத்தில் வழக்கில் இருந்துள்ளதை தெளிவுறுத்துகின்றது. மேலும் வெள்ளிவீதியார் இயற்றியுள்ள அகநானூற்றுப் பாடலில் ஆதிமந்தி போல என்னும் சொற்றொடர் பயின்று வந்துள்ளது. இதனை,

> **வாடல் உழுஞ்சில் விளை நெற்று அம் துணர்**
> **ஆடுகளப் பறையின், அரிப்பன ஒலிப்ப,**
> **கோடை நீடிய அகன் பெருங் குன்றத்து,**
> **-------------------------------------**

**காதலற் கெடுத்த சிறுமையோடு, நோய்கூர்ந்து,**
**ஆதிமந்தி போலப் பேதுற்று**
**அலந்தனென் உழல்வென் கொல்லே**
**பொலந்தார்**
**-----------------------------------**

**(அகம் - 45)**

எனும் பாடலின் வழி அறியமுடிகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெண்புலவர்களான ஔவையார், வெள்ளிவீதியார்; ஆகியோரின் இலக்கியப் புலமை அவர்தம் எடுத்தாண்டுள்ள சொற்றொடர்கள் வழி அக்காலத்தில் வழக்கில் இருந்த இலக்கியப் பயிற்சியையும் இலக்கியக் கல்வி நிலையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள், பிற்கால ஔவையார்கள் முதலானவர்களின் கல்வித்துறைசார் ஆளுமைகளையும் அவர்கள்தம் இலக்கியப் படைப்பாக்கங்கள் எடுத்துரைக்கின்றன. மரபிலக்கிய படைப்பாக்கத்தைத் தொடந்து புத்திலக்கியப் படைப்பாக்கத்திலும் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

1947 வரையிலான காலகட்டத்தில் 45 பெண் புதின ஆசிரியர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் 300க்கும் மேற்பட்ட புதினங்களை எழுதியுள்ளனர் என்று பழனியப்பன் குறிப்பிடுகின்றார்.[3]

இந்திய விடுதலைக்கு முன்னர் வாழ்ந்த பெண் கவிஞர்கள் தொடர்பான தகவல்களை “அரியப்படாத பெண்பாற் புலவர்கள்” எனும் தலைப்பில் தாயம்மாள் அறவாணன் தொகுத்தளித்துள்ளார். மேலும் புதுக்கவிதைத் துறையில் 57 பெண் கவிஞர்கள் ஈடுபட்டு வருவதாக சம்பத் குறிப்பிடுகின்றார்.[4] மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் ஆணாதிக்கச் சமூக மரபிலும் பெண்கள் இலக்கியப் படைப்பாக்க முயற்சியில் ஈடுபடுவதற்கு ஏற்ற ஆளுமையைப் பெற்றிருந்தனர் என்பதனை அறியமுடிகிறது. இந்த ஆளுமையின் கூறுகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இலக்கணக் கல்வி, இலக்கியக் கல்வி பெற்றிருத்தில்.
2. எதிர்க்குரல் ஆளுமை, சமய ஆளுமை, நீதி உரைக்கும் ஆளுமை பெற்றிருத்தல்.
3. காலத்தால் அழியாத இலக்கியத் தன்மை வாய்ந்த படைப்புகளைப் படைக்கத்தக்கவர்களாகத் திகழ்தல்.
4. இலக்கியப் படைப்பாக்க நிலையில் உருவாகும் புதியனவற்றை எதிர்கொள்ளும் திறன் பெற்றிருத்தல்.

இத்தகைய படைப்பாக்க ஆளுமை உடையவர்களாகப் பெண்கள் திகழ்ந்துள்ளனர். ஆயினும் இலக்கணப் படைப்பாக்கத் துறையில் அவர்களின் பங்களிப்பு ஒரு விழுக்காட்டினும் குறைவு. இதற்கானக் காரணம் என்ன? இந்திய மொழியின் இயங்கியலில் இலக்கியப் படைப்பாக்கங்கள் படைத்த பெண்கள் 9 மொழிப் புலமையாக்கத் துறையான இலக்கணத்தில் அவர்களின் பங்களிப்பு குறைவுக்கான காரணத்தை ஆராய்தல் வேண்டும்.

ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர், பெரியார் முதலானவர்கள் பெண் உரிமையை உரத்துப் பேசியதன் பின்னர் அறிவுத் துறைகளிலும் அரசியலிலும் இலக்கியப் படைப்பாக்கத்திலும் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவிற்கு உயர்ந்தன என்றாலும் இலக்கணப் உருவாக்கத் துறையில் பெண்களின் ஈடுபாடு மிக அருகியதாகவே அமைந்துள்ளது.

## இலக்கண உருவாக்கமும் பெண் இருப்பும்

இலக்கணப் படைப்பாக்கத் துறையில் ஆண்கள் ஈடுபடுவதற்கும் பெண்கள் ஈடுபடுவதற்கும் இடையே வேறுபாடு உண்டு. சமூகத்தின் மொழிசார் உணர்வும் படைப்பாளியின் ஆளுமைசார் அறிவும் நல்ல இலக்கணப் படைப்பாக்கத்திற்குப் போதுமானவை எனும் பொது வரையறை,

ஆணின் இலக்கணப் படைப்பாக்க முயற்சிக்கும் போதுமானதே. ஆனால் பெண்ணின் இலக்கணப் படைப்பாக்க முயற்சிக்கு மேற்சொல்லப் பெற்ற இரு நிலைகளுக்கு அப்பால் வேறு சிலவும் தேவையாக அமைகின்றன. பெண்ணின் இலக்கணப் படைப்பாக்கத்தில் சமூகப் பண்பாட்டு நிலை சார்ந்த மனவுணர்வு முதலிடம் வகிக்கிறது. பெண்ணை ஓர் உயிர் உள்ள பொருளாகப் பார்க்கும், பாவிக்கும் நிலைக்கு மாறாக, அறிவுத் துறையின் குறியீடாகப் பார்க்கும், பாவிக்கும் மனப்போக்குத் தழைத்துவிட்ட சமூகத்தில்தான் பெண்கள் பங்களிக்கும் இலக்கண உருவாக்க முயற்சி சாத்தியமாகும். படைக்கப் பெறும் இலக்கண நூலும், பயன்பாட்டில் இருக்கும். எனவே, ஒரு சமூகத்தில் பெண் இலக்கணப் படைப்பாளி முயற்சியில் ஈடுபட வேண்டும் எனில் அச்சமூகம் குறிப்பிடத்தக்க மொழி சார், பண்பாடுசார், உயர்மனப்பாங்கு சூழல், உடையதாகத் திகழவேண்டும். அச்சூழலின் உட்கூறுகள் கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

1. மொழியையும் இலக்கியத்தையும் ஆழ்ந்து கற்று நூலாகப் படைக்கும் ஆளுமையைப் பெண்கள் பெற்றிருத்தல் - இந்த ஆளுமைக்குரிய ஏற்புடைமை சமூகத்தில் நிலவுதல்.
2. பெண்கள் மொழி, இலக்கியம் முதலான அறிவுசார் துறைகளைக் கற்கும், கற்பிக்கும் பணியில் ஈடுபடுதல்.

இத்தகுச் சூழல் தமிழகத்தில் துளிர்விட்டிருந்ததைக் காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம் ஆகிய இலக்கண நூல்களின் உருவாக்கங்கள் தெளிவாக்குகின்றன.

### இலக்கண உருவாக்கம் - காக்கைப் பாடினியக் கருத்தியல்

காக்கைபாடினியம் சிறுகாக்கை பாடினியம் இன்னும் இரு யாப்பிலக்கண நூல்கள் யாப்பருங்கல விருத்தியுரை யாப்பருங்கலக் காரிகை உரை மேற்கோள்கள் வழி அறியமுடிகிறது. அவை மட்டுமின்றி தொல்காப்பிய உரைகளிலும், நன்னூல் மயிலைநாதர் உரையும் களவியல் உரையில் வீரசோழிய உரையிலும் உள்ளன. இவற்றினின்று காக்கைப்பாடினிய நூற்பாக்கள் 89 கிடைத்துள்ளன. இரா இளங்குமரன் அவர்கள் உறுப்பியல், செய்யுளியல், பொதுவியல் எனப் பகுத்துக் கொண்டு இந்நூலை அமைத்துத் தருகிறார். சங்க இலக்கியத்திலும் ஒரு காக்கை பாடினியார் இருந்துள்ளார் என்பதனைப் பெண்பாலைக் குறிக்கப் பயன்படும் "பாடினி' எனும் சொல் புறம்-242, புறம் -11 புறம்- 364 புறம்- 361 புறம்- 319. என்ற பாடல்களில் "பாடினி" என்பது பாணனுக்கு பெண்பாலாக அமைவதைக் காணமுடிகிறது. எனவே "பாடினி" என்ற சொல் பெண்பாலைக் குறிக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது. காக்கைப் பாடினியாரின் இலக்கணப் புலமையை யாப்பருங்கல விருத்தி உரைகாரர் போற்றி ஒரு வெண்பா இயற்றியுள்ளார். இதனை,

> **தொல்காப்பியப் புலவர் தோன்ற விரித்துரைத்தார்**
> **பல்கா யனார்பகுத்துப் பன்னினார் - நல்யாப்புக்**
> **கற்றார் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்,**
> **சொற்றார்தம் நூலுள் தொகுத்து**

என்பதன் வழி அறிய முடிகின்றது. காக்கைப்பாடினியத்துக்குப் பின் மற்றுமொரு காக்கைப்பாடினியார் இலக்கண நூல் இயற்றியுள்ளார். அவரிலிருந்து இவரைப் பிரித்துக் காட்டவே சிறுகாக்கைப் படினியார் என்று வழங்கப்பெற்றார். இந்நூல் விருத்தி உரைமேற்கோளிலிருந்து பெறப்பட்ட 31 நூற்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காக்கைப் பாடினி, சிறுகாக்கைப் பாடினி இவ்விரு நூல்களும் பயன்பாட்டில் இருந்தமையை யாப்பருங்கல விருத்தி உரைவழி அறியமுடிகின்றது. பெண் படைப்பாளரின் கருத்தென்பதால் ஆண் படைப்பாளரான

விருத்தி உரைகாரர் அவற்றைப் புறக்கணித்து விடவில்லை. மாறாக, உயர்வாக எண்ணியதைக் கீழ்வரும் பதிவுகள் வழி அறியமுடிகின்றது.

காக்கை பாடினியார் முதலிய மாப்பெரும்புலவர் செப்பலோசை சிதைந்து வெண்பா அழியும் என்னும் ஏதுக்காட்டி மறுத்தனர் (யாப்பருங்கல விருத்தி - 101)

> **காக்கை பாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் மாப்பெரும்புலவர் தம் மதம் பற்றி நாலசைச்சீர் விரித்தோதினார். இந்நூலுடையார்**
>
> **(யாப்பருங்கல விருத்தி - 433).**

காக்கைப்பாடினியத்திற்குக் கிடைத்த இந்த வரவேற்பிற்குக் குறிப்பிடத்தக்க காரணம் உண்டு. பொதுவாகவே எந்த ஓர் இலக்கண நூலும் கருத்து வெளிப்பாடு என்னும் நிலைகளில் முந்தைய நூல்களிலிருந்து வேறுபடுகையில் தனக்கெனத் தனி ஓர் இடத்தைத் தக்கவைத்துக்கொள்கிறது. தனக்கென ஒரு மரபு உருவாகக் களம் அமைத்துக் கொள்கின்றது.

பிற்காலத்து யாப்பிலக்கண நூல்கள் பலவும் வழிமொழிந்துள்ள அடிப்படைக் கருத்துகளுக்கு மூலமாக இவர் (காக்கை பாடினியார்) நூற்பாக்கள் உள்ளன. ஒரு சிலவற்றைச் சுட்டுதல் வேண்டும். அசைக்கு உறுப்பாகிய எழுத்துகள் பதின்மூன்று வகைப்படும். நேரசை, நிரையசை என்பன இரண்டினையும் முறையே தனியசை, இணையசை என்று கூறுவர். மூவகைச்சீர் 64 என்பர் தொல்காப்பியர். இவர் அவற்றை எட்டாகச் சுருக்கியவர் எழுத்தெண்ணி அடிவகுக்கும் பழைய மரபு இவர் காலத்தில் நிலைபெறவில்லை. சீரெண்ணி குறளடி முதல் கழிநெடிலடி வரை எண்ணும் மரபினை இவர் ஏற்றனர்.[5]

என்று காக்கை பாடினியம் தொல்காப்பியச் செய்யுளிலிருந்து வேறுபடுவதைக் குறிப்பிடுவர் சோ.ந.கந்தசாமி. இவ்வாறு காக்கைபாடினியம் தனக்கெனத் தனி ஒரு மரபை உருவாக்கிக் கொண்டாலும், தனி ஒரு நூலாக அந்நூல் வாசிக்கப்பெறவில்லை. ஏனெனில் இலக்கண வாசகனுக்கும் பெண்ணின் இலக்கணப் படைப்பிற்கும் இடையே ஒரு பெரு இடைவெளி நிலவியுள்ளது. இதனால் தான் விருத்தியுரைகாரர் காலத்திலேயே காக்கைபாடினியம் நூலாகக் கற்கப் பெறாமல் கருத்தியல் வழக்காகவே அறியப்பெற்றுள்ளது. இதை இணைக்குறளாசிரியம், அடிமறி மண்டிலம் ஆகிய அசிரியப் பாக்களின் இயல்பும், ஆசிரியத்துறை விருத்தங்களின் இயல்பும் சுட்டிய இவரது (காக்கைபாடினியார்) நூற்பாக்கள் கிடைத்துள்ளன. ஏனைய பற்றியும் நூற்பாக்கள் பேணப் பெறவில்லை என்பது தெளிவு[6] என்ற சோ.ந.கந்தசாமி அவர்களின் எனும் கருத்துவழி அறியமுடிகிறது.

காக்கைப் பாடினியம் ஒரு நூலாக வாசிக்கப் பெற்றிருப்பின் பெண் எழுத்து மரபில் தோன்றிய முதல் இலக்கணமாகப் போற்றப் பெற்றிருக்கும். இருப்பினும் முந்து நூல் மரபினின்று புதிய யாப்பியல் கருத்தை முன்மொழிந்த முதல் இலக்கணக் கோட்பாட்டாளர் காக்கைப் பாடினி என்றால் அது மிகையாகாது. ஒரு நூல் சிதைந்து போவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவற்றில் முதற்காரணமாகத் திகழ்வது அந்நூலூக்கான வாசகர் உருவாகாத நிலையே ஆகும். காக்கைபாடினியத்தைப் பொறுத்தவரையில், அந்நூல் முன்வைத்த புதுவகை யாப்பியல் சிந்தனைகள் கருத்தியல்களாக ஏற்றுக்கொள்ளப் பெற்றன. ஆனாலும் அந்நூலை ஓர் இலக்கணப் படைப்பாக வாசிக்கும் மனப்பான்மை சமூகத்தில் இல்லாமல் போய் உள்ளது. காக்கைபாடினியக் கருத்துகள் இன்றுவரை யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் நூல்களின் வழியாகக்

கற்கப்பெற்று வருவது, ஆண் படைப்பிற்குக் கிடைக்கும் வாசக வரவேற்பையும் பெண் படைப்பிற்குக் கிடைக்கும் வாசகப் புறக்கணிப்பையும் தெளிவுபடுத்தும். இது போன்ற பாலியல் அடிப்படையிலான வேறுபாட்டு உணர்வுடன் கூடிய வாசிப்பு முறைதான் பெண்கள் அறிவுசார் படைப்பாக்கமான இலக்கணத்தை உருவாக்கும் ஆளுமை உடையவராக வளர இயலாமல் போனதற்குக் காரணமாக இருக்கலாம் என்பதனை அறியமுடிகிறது.

### பெண்களின் கற்றல்-கற்பித்தல் தொழிற்பாடும் படைப்பாக்கச் சூழலும்

பெண்கள் புலமையாக்கப் படைப்பாக்கங்களில் இயங்காமைக்கான புறச்சூழல்களில் கற்றல் கற்பித்தல் தொடர்பான தொழிற்பாடுகளில் பெண்கள் எத்தன்மையில் இயங்கினர் என்பதனை அறிதல் முக்கியமான ஒன்று. பெண்கள் கல்வி கற்றவர்களாக இருந்ததைப் பண்டைய இலக்கியப் பெண்புலவர்களின் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. ஆயினும் இடைக்காலத் தமிழ்ச்சமூகத்தில் கல்விப் புலச் செயற்பாடு சமயத்தின் பிடியில் இருந்தது. சமயப்பின்னணி கொண்ட கல்விப்புலத்தில் பெண்துறவிகள் கற்பித்தல் பணியை மேற்கொண்டதை, பிருதிவி விடங்க குரத்தி, குணசீர்த்தி படாரகரின் வழி மாணாக்கியர் கனகவீரக் குரத் தியர் முதலிய சமணப்பெண்துறவிகள் பற்றியும் பெண் துறவிகளிடத்தில் மாணாக்கர்களும் பயின்ற செய்தியைக் கழுகுமலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. கல்விக்கென்றே வாக்தேவி என்ற தெய்வம் இருந்தது. இதுவே வைதிய நெறியான சரஸ்வதிக்கு முன்னோடி. சரஸ்விக்குரிய வெள்ளுடை என்பது சமணப்பெண் துறவிகளின் வெள்ளளையாடை மரபிலிருந்து வந்ததாக இருக்கலாம்.[7] என்று பெண்துறவிகள் வாழ்ந்தமையைக் குறிப்பர். ஆயினும் பெண்துறவிகள் தமிழகத்தில் பெருமளவில் வாழ்ந்தமை தொடர்பான விரிவான குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. மேலும் பெண்துறவிகளின் கற்பித்தல் தொழிற்பாட்டில் இலக்கிய. இலக்கணப் படைப்பாக்கங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. சமயச் சார்பு பெண் துறவிகளை “சமயம் சார்ந்த சொல்லாடலுக்கு” மட்டுமே உட்படுத்தியமையைக் கல்வெட்டுச் சான்றுகள் குறிப்பிடுவதன் வழி, சமயச் சார்பான சூழலே பெண்கள் இலக்கணம் மற்றும் புலமையாக்கப் படைப்பாக்கங்களில் ஈடுபடாமல் போனதற்குரிய முதன்மைக் காரணமாக இருத்தல் வேண்டும்.

### உரை உருவாக்கமரபும் பெண் இயங்கியலும்

தமிழ் அறிவுப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியில் பெரும் புலமையாளர்களாக விளங்கும் உரையாசிரியர்கள் இக்காலகட்டத்தில் பெரும் அறிவுச் சொல்லாடலை நிகழ்த்தியுள்ளனர். ஒரு பிரதியின் மீது நிகழ்த்தப்படுகின்ற நுட்பமானதொரு வாசிப்புச் செயல்பாடாக மட்டும் அமையாமல் அப்பிரதியில் உறையும் அர்த்தங்களை வெளிக்கொணர்பவைகளாகவும் உரைகள் விளங்குகின்றன. இலக்கணம், இலக்கியம் முலானவற்றின் மீது நிகழ்வுற்ற அறிவுசார் வாசிப்பின் விளைவாக உரைகள் தோன்றுகின்றன. இந்த உரையாக்க முயற்சியிலும் பெண்களின் பங்களிப்பு அரிதாகவே அமைந்துள்ளது. தமிழ் உரையாசிரியர்கள் உரைநூல்கள் தொடர்பான விரிவான கருத்துக்களை மு.வை. அரவிந்தனும், மு.அ.முகம்மது உசேனும் முன் வைத்துள்ளனர். அரவிந்தனின் உரையாசிரியர்கள், எனும் நூலில் *167* உரையாசிரியர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் திருக்குறளுக்கு திருக்குறள் தீபாலங்காரம் என்ற பெயரில் மருங்காபுரி ஜமீன்தாரினி கி.சு.வி.இலட்சுமி அம்மணி *1928* -ஆம் ஆண்டில் மிக நீண்ட விளக்கவுரை எழுதியுள்ளார். இவ்வுரைக்கு அன்றைய தமிழறிஞர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கியுள்ளனர். மேலும்

திருவாய்மொழிக்கு உரையெழுதிய திருக்கோனேரிதாஸ்யை, கந்தரனுபூதிக்கு உரையெழுதிய க.ர.ஆதிலட்சுமி அம்மையார் என்பவர்களைத்தவிர பிற பெண் படைப்பாளர்கள் யாரும் உரை உருவாக்க மரபில் நீண்ட பங்களிப்பினை நல்கவில்லை.

## திருக்கோனேரி தாஸ்யை – திருவாய்மொழி உரை.

வைணவப் பெண்மணியான இவர் திருவாய்மொழி வாசக மாலை என்ற நூலை எழுதினார். இந்த நூல் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் தேர்ந்தெடுத்த 164 பாடல்களுக்கு வியாக்கியானம் போல அமைந்துள்ளது. திருவாய்மொழியில் 1102 பாடல்கள் உள்ளன. 10 அல்லது 11 பாடல்கள் கொண்டது 1 பதிகம். 10 பதிகம் கொண்டது 1 பத்து, 10 பத்துகள் சேர்ந்ததே திருவாய்மொழி. "வாசக மாலை" ஆசிரியர் தம் நூலில் ஒவ்வொரு பதிகத்திலும் முதல் பாட்டையோ அல்லது முதல் பாட்டும் மற்றொரு பாட்டும் ஆக இரு பாட்டுக்களையோ எடுத்துக்கொண்டு, அவற்றுக்கும் திருவாய் மொழியின் முதல் பாடலுக்கு தகுந்தவாறு பொருள் கூறுகின்றார். திருவாய்மொழி பாசுரங்கள் அனைத்திலும் சொல்லப்பட்ட பொருள், "முதல் பாசுரத்தின் பொருளே" என விவரிக்கின்றார். இவ்வாறு இது 100 பகுதிகளாக இருப்பதால் இந்த நூல் "விவரண சதகம்" என்று பெயர் பெற்றது. நாலாயிரப் பிரபந்த உரைகள் போல இந்நூலும் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளது. பல வடமொழி நூல்கள் இதில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பல பழமொழிகளை கூறுகின்றார். திருக்கோனேரிதாஸ்ய அவர்களின் திருவாய்மொழி உரைப்பற்றிக் குறிப்பிடும் போது,

இவர் புலமைமிக்க வைணவப்; பெண்மணி. திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரண சதகம் எழுதினார். இந்த நூல் திருவாய்மொழியிலிருந்து தேர்ந்தெடுத்த 114 பாடல்களுக்கு விளக்கம் கூறுகிறது. திருவாய்மொழியின் ஒவ்வொரு பதிகத்திலும் உள்ள முதல் பாட்டையோ அடுத்த பாட்டையோ எடுத்து விளக்குகின்றது. பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களின் கருத்தும் ஒன்றிலேயே அடங்குமாறு விளக்குகின்றார். நூறு பகுதியாக விவரிப்பதால் இது விவரணச தகம் எனப்பட்டது. இதனை 1952 இல் தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்டது.[8] என்று மு.வை.அரவிந்தன் உரையாசிரியர்கள் நூலில் குறிப்பிடுகின்றார். உசேனின் தமிழ் உரைநூல் உரையாசிரியர் நூலடைவு நூலில் 492 உரையாசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் 2003 நூல்களுக்கு உரையெழுதி உள்ளனர். தவிர வேறு யாரும் பெண்கள் இல்லை. இவற்றின் வழி உரையாக்கம் சார்ந்த பெண்களின் படைப்பாக்கப் பணி தமிழ்ச்சமூகத்தின் புலமையாக்க வெளியில் பெண்கள் தொடர்ந்து இயங்காமைக்கான சமூக்காரணத்தை ஆராய்வதன் வழி வெளிப்படும்.

## நிறைவுரை

காலந்தோறும் பெண்கள் தங்களுக்கான ஆற்றலைச் சமூகத்தினின்றும் சுயதேடலின் விளைவாகவும் பெற்றுவந்துள்ளனர். இன்றைய காலத்தில் பெண்களுக்கான படைப்புவெளி பரந்துபட்டதாக இருப்பினும் அன்றைய காலகட்டத்தில் பெண்கள் கல்வி கற்றுத் தங்கள் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தியமைக்கான சமூகச்சூழல் கடினமாகவே இருந்துள்ளதை பெண் படைப்பாளிகளின் எண்ணிக்கை புலப்படுத்துகிறது. அனைத்துத் துறையில் பெண்கள் ஈடுபட்டிருப்பினும் இலக்கண உருவாக்கப் படைப்பு வெளியில் பெண்களின் பங்கு குறைவானதே. மரபிலக்கண உருவாக்கத்தில் பெண்கள் மேற்கொண்ட

பணிகள் சமூகத்தின் பார்வைக்கு வெளிப்படாமை திட்டமிடப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**பார்வை நூல்கள்**

1. இலக்கண வரலாறு, இரா.இளங்குமரனார். ப: 15.
2. படைப்பாளுமை, இரா.அறவேந்தன், ப: 4.
3. விடுதலைக்கு முந்தைய பெண்புதினப் படைப்பாளர்கள், மு.பழனியப்பன்.
4. பெண்ணியத் திறனாய்வு நோக்கில் பெண்பாற் கவிஞர்களின் புதுக்கவிதைகள் இரா.சம்பத்.
5. சோ.ந. கந்தசாமி, *யாப்பிலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும்,* ப: 27.
6. சோ.ந. கந்தசாமி, யாப்பிலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும், ப: 20.
7. தொ. பரமசிவம், பண்பாட்டு அசைவுகள், ப: 98.
8. உரையாசிரியர்கள், மு.வை.அரவிந்தன். ப: 506.